# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்)

**வைட் றோஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ புத்திக பதிரண
அவர்களால் 2016, மே மாதம் 04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ *104 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்)

### வைட் றோஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"வைட் றோஸ் மன்றம்" எனவழைக்கப்படுவதும் அறியப்படுவது மான மன்றமொன்று அதன் உறுப்பினர்களினால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதன் முன்னர் கொழும்பில் அமைக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட வைட் றோஸ் மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக் கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்துடன் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கான தாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

வைட் றோஸ் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் "வைட் றோஸ் மன்றத்தின்" தற்போதைய உறுப்பினராகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "வைட் றோஸ் மன்றம்" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்

களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியவாறு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதா யிருத்தலும் வேண்டும்.

**3**. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவென இத்தால் வெளிப்படுத்தப் படுகிறது :- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) நாட்டின் எல்லாப் பாகங்களிலுமுள்ள அனுகூலம் குறைந்த ஆட்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவர்களுக்கு உதவுவதன்மூலமும், தனிப்பட்ட தேர்ச்சிகளுக்குப் பயிற்சியளித்து அவற்றை அபிவிருத்தி செய்வதன்மூலமும், அவர்கள் தொழில் பெறுவதற்கு உதவி செய்து அவர்களின் வாழ்க்கைத் தராதரத்தைச் சீராக்குவதன் மூலமும் அவர்களுக்குச் சமூக சேவைகளை வழங்குதல் ;

(ஆ) சிறுவர்களினதும் இளமாட்களினதும் உளரீதியிலான மற்றும் உடல்ரீதியிலான நல்வாழ்வில் ஆக்கபூர்வமான மாற்றத்தை உருவாக்குவதற்குப் படைப்பாக்கக் கலைகளைக் கற்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புக்களை அளிப்பதன்மூலம் அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துதல் ;

(இ) பல்வேறுபட்ட செயல்திறன்களைக் கொண்டுள்ள தனியாட்கள் உச்சளவினதான திறமையை எய்துவதற்கு அவர்களுக்கு வாய்ப்புக்களையும் நிதியுதவிகளையும் வழங்குதல் ;

(ஈ) இளமாட்கள் புதிய தேர்ச்சிகளைக் கற்று தொழிற்பயிற்சி பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்புக்களை அளித்தலும், தமது சமுதாயங்களினுள் சிறிய அளவிலான தொழில் களைத் தாபிப்பதற்கு அவர்களுக்கு உதவுதலும்;

(உ) பிரசைகளின் பொது நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு நாட்டின் எல்லா இடப்பரப்புகளிலும் தேவையுள்ளோருக்கு இலவச மருத்துவ முகாம்களையும் பிணியாய்வு நிலையங்களையும் ஒழுங்குபடுத்துதலும் இலவச மருந்துகளை விநியோகித்தலும் ;

(ஊ) இலங்கையிலுள்ள ஏதேனும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தமது வாழ்க்கைகளைக் கூடுதல் திறமையான முறையில் நடாத்துமுகமாக அவர்களுக்கு உதவுவதற்கென, கணக்கீட்டு, நிதிசார், சட்ட மற்றும் வேறு உயர்தொழிற்சார் ஆதரவையும் மதியுரையையும் அவர்களுக்கு வழங்குதல் ;

(எ) நாட்டிலுள்ள பல்வேறு சமுதாயத்தினரை ஒன்றிணைப்பதற்கும், அவர்களுக்கிடையே ஒருவர் மற்றவர் பற்றிய விழிப்புணர்ச்சியையும் புரிந்துணர்வையும் அதிகரிப்பதற்கும், சமூக, ஆன்மீக மற்றும் கலாசார செயற்பாடுகளை மேம்படுத்துதல் ;

(ஏ) காணிகளையும் வீடுகளையும் சொந்தமாகக் கொண்டிராத குடும்பங்களுக்குக் காணிகளையும் வீடுகளையும் வழங்குதல் ;

(ஐ) அறிவியற் கற்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் நாட்டின் அபிவிருத்திக்காகவும், தீவுபூராவும் தகவல் தொழினுட்பவியல் நிலையங்களைத் தாபித்தல்;

(ஒ) போதிய வசதிகளற்ற பாடசாலைகளுக்கும் பயிற்சி நிலையங்களுக்கும் காணிகளையும் கட்டிடங்களையும் வழங்குதலும், அவசியமானவிடத்து வேறு உள்ளகக் கட்டமைப்பு வசதிகளை வழங்குதலும் ;

(ஓ) நாட்டில் கணனி அறிவைச் சீராக்கும் நோக்குடன் கணனிப் பாவனையை அதிகரிப்பதற்குப் பாடசாலைகளுக்கும், பல்கலைக்கழகங்களுக்கும், அத்தகைய வேறு நிறுவனங்களுக்கும் உதவுதல் ;

(ஔ) அவசியமானவிடத்து, கமத்தொழில் மற்றும் கடற்றொழில்களுக்கான வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(க) இளமாட்களிடையே தொழிலைத்தோற்றுவிப்பதற்காக அரசாங்க மற்றும் அரசாங்கஞ்சாரா முகவர் நிலையங்களுக்கு உதவி வழங்குதல் ;

(ங) மேற்குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்களைத் தொடங்கி முன்னெடுத்துச் செல்வதற்காக மானியக் கொடைகளையும் வேறுவகையினவான நிதியுதவிகளையும் பெறுதலும் வழங்குதலும் ;

(ச) உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள ஒத்த குறிக்கோள்களைக்கொண்ட ஆட்களுடனும் ஒழுங்கமைப்புகளுடனும் ஒருங்கிணைதலும், மேற்குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காகக் கூட்டங்கள், கருத்தரங்குகள், மாநாடுகள் முதலியவற்றை ஒழுங்குபடுத்துதலும் ;

(ஞ) வைட் றோஸ் மன்றத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்குடன் கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், செயமலர்வுகள் மற்றும் வேறு செயற்பாடுகள் என்பவற்றை மேம்படுத்துதலும், ஒழுங்கேற்பாடு செய்தலும், ஒழுங்குபடுத்துதலும், அத்தகைய புத்தகங்கள், சஞ்சிகைகள், செய்திமலர்கள் மற்றும் செய்தித்தாள்கள் என்பவற்றை அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும் ;

(ட) மேற்கூறப்பட்ட குறிக்கோள்கள் என்பவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச்

செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள், அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல் மற்றும் வைத்திருத்தல், வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், தொழிற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பு இல்லாமல் பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக் கப்பட்ட ஏதேனும் காணியில் ஏதேனும் கட்டடத்தை அல்லது கட்டமைப்பை நிறுவுவதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், தொழிலுக்கமர்த் தல், பதவியிலிருந்து விலக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அப்போதைக்கு வலுவிருக்கும் கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கும் அமைவாக, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தவிசாளரையும், துணைத் தவிசாளரையும், முகாமைப் பணிப்பாளரையும், செயலாளரையும், பொருளாளரையும் ஆகக்கூடியது வேறு ஏழு பணிப்பாளர்களையும் கொண்டதும், (இதனகத்துப்பின்னர் ''சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பாளர் சபை யொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபையானது இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் கழகத்தின் சபையுறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய சபை, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கிணங்கப் பணிப்பாளர் சபையொன்று தேர்ந்தெடுக்கப்படும்வரை பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) கூட்டுத்தாபனமானது, அதன் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டும், பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும் தொடர்பான வேறேதேனும் கருமத்துக்காகவும், இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களை வகுப்பாக்கஞ் செய்தலும் உறுப்பாண்மைக் கட்டணங்களும், அவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல், மீளப்பெறுதல் அல்லது உறுப்பாண்மையிலிருந்து வெளியேற்றுதல் என்பனவும் ;

(ஆ) பணிப்பாளர் சபையுறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும், அவர்களின் தத்துவங்களும் கடமைகளும் ;

(இ) பதவி தாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்களின் பதவிக்காலம், அவர்கள் பதவிநீங்குதல், பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும் கடமைகளும் ;

(ஈ) பேரவையின் கூட்டங்களைக் கூட்டுவதிலும் நடாத்துவதிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை, அதற்கான கூட்டநடப்பெண் மற்றும் கூட்டங்களில் அலுவல்களை நடாத்துதல் ;

(உ) நிதிகளுட்பட, கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தல் மற்றும் முகாமை செய்தல்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று, அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் அதேமுறையிலும் மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம், அது திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடைகள், விருப்பாவணக் கொடைகள், நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், இறுதிவிருப்பாவணக் கையளிப்புக்கள், கட்டணங்கள், நன்கொடைகளுக்கான மானியக்கொடைகள் அல்லது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்தும் தனியாட்களிடமிருந்தும் உறுப்பினர்களிடமிருந்தும் உறுப்பினர்கள் அல்லாதோரிடமிருந்தும் காசாக அல்லது பொருளாகப் பெறப்பட்ட உதவுதொகைகள் என்ற வகையாக இதுவரை பெறப்பட்ட அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் இந்நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) பெறப்பட்ட எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் பெயரில் ஒன்றோ பலவோவாய வங்கிகளில் வைப்பிலிடப்படுதல் வேண்டுமென்பதுடன், சபை தீர்மானிக்கவேண்டியவாறான ஏதேனும் பொருத்தமான முறையில் முதலீடு செய்யப்படுதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட எல்லாச் செலவினமும் கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படற்பாலவையும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படற்பாலவையுமான கடன்கள்.

**8**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று கழகத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், அந்நாளன்று கழகத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் என்பனவும், இச்சட்டத்தின் நோக்கத்துக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

**9**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, உறுப்பாண்மைக் கட்டணங்களாக அத்தகைய உறுப்பினரிடமிருந்து வருமதியாகவுள்ள தொகைக்கு விஞ்சுதலான ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

**10.** ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு, நம்பிக்கைப்பொறுப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும், அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடனும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும் ; அத்துடன் நம்பிக்கைப் பொறுப்பொன்றின் விடயத்தில், கூட்டுத்தாபனமானது, நம்பிக்கைப் பொறுப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அதனைக் கையாளுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளில் ஏற்பாடு செய்யப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத் தாட்சியாக அச்சாசனத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது சாட்சியாக எவரேனுமாள் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்களின் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களின் உரிமைகளைப் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்